# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# C.C. No.1272/2022 P.W.4

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ரமேஷ் | த-பெ | முனியாண்டி |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 54/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.06.2026

**எதிரி ஆஜர்.**

------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து காரைக்குடி தெற்கு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி தவமுனி என்பவர் பணிமாறுதல் காரணமாக வேறு காவல் நிலையத்திற்கு சென்று விட்ட காரணத்தால் அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எதிரி தரப்பில் ஆட்சேபனை இன்றி நீதிமன்ற அனுமதியுடன் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். விசாரணை அதிகாரி 08.05.2020 அன்று 16.00 மணிக்கு பணியில் இருந்தபோது திருமுருகன்செல்வன் என்பவர் நிலையம் ஆஜர் ஆகி கொடுத்த புகாரைப்பெற்று நிலைய குற்ற எண். 306/2020 பிரிவுகள் 294(b), 324, 506(2) இதச பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். **புகார் அசாஆ 3. முதல் தகவல் அறிக்கை அசாஆ 4.** பின்னர் இந்த வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இந்த வழக்கின் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் சந்தோஷ் மற்றும் முகமது மில்கான் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆகியவை தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அசாஆ 5. பார்வை மகஜர் அசாஆ 6.**

வழக்கு சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரியை தேடிச்சென்ற நிலையில் எதிரியானவர் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம் சிவகங்கையில் முன் ஜாமீன் பெற்றுவிட்ட காரணத்தால் அவரை கைது செய்ய முடியவில்லை. பின்னர் இந்த வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் சர்மிளா அரசு மருத்துவமனை காரைக்குடி என்பவரை விசாரணை செய்த அவரிடம் இருந்து காய சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி காய சான்றிதழில் காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண வகையை சார்ந்தது என்று சான்றிதழ் வழங்கினார். **காய சான்றிதழ் அசாஆ 7.** வழக்கின் விசாரணை நிறைவு செய்து எதிரி மீது

குற்ற முகாந்திரம் இருந்த காரணத்தால் 31.07.2020 அன்று மேற்சொன்ன பிரிவுகளின் அடிப்படையில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை**

புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை முறையாக புலன்விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அசா1 இந்த வழக்கில் பிறழ்சாட்சியாக மாறிய விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.06.05 12:03:04 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.